# மதுசாரம், புகைத்தல் மற்றும் போதைப்பொருட்களைத் தடுப்போம்



## தொடர்புகளுக்கு
## RAHAMA


+94 24 2222287

www.rahama.lk

இல. 60/15, சிந்தாமணிப்பிள்ளையார் கோவில் வீதி, வவுனியா.


புகையிலை பாவனை காரணமாக, இலங்கையில் ஆண்டுதோறும் 22,000 க்கும் மேற்பட்டோர் இறக்கின்றனர். புகையிலை உற்பத்திகளின் விலை உயர்வுக்குப் பிறகு புகையிலை நுகர்வு 32.71% லிருந்து 22.61% ஆக குறைந்தது, ஆனால், அது குறிப்பிட்ட சுகாதார மாற்றத்தைக் கொண்டு வரவில்லை. கடந்த கால அரசாங்கங்கள் கூட புகையிலை இல்லாத இலங்கையை கனவு கண்டிருந்தாலும், இப்போது, அது புகையிலைத்தாண்டி வெவ்வேறு வடிவங்களில் பாவனையில் உள்ளது. இது உலகம் முழுவதும் பொதுவானது என்றாலும், 80% இறப்பு வளர்ந்து வரும் நாடுகளிலேயே நிகழ்கிறது.



## மதுசாரம், புகைத்தல் மற்றும் போதைப்பொருள் தடுப்பு ஆர்வளர்கள்- RAHAMA



"ஆண்கள் மதுசாரம் பாவிப்பதால் குடும்ப வன்முறை, சண்டைகள் மற்றும் குழந்தைகள் பாதிக்கப்படுவதை நாங்கள் காண்கிறோம்"

**லகிராணி, ஒட்டுசுட்டான்**



“வவுனியா வட பகுதியில், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பாவனையால் வீட்டு வன்முறை, குழந்தைகள் உரிமை மீறல், பொருளாதார இழப்பு, குடும்ப மகிழ்ச்சி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் உள ஆரோக்கியத்தில் பாத்திப்பு ஆகியவற்றைக் காண்கிறோம்”

**சந்திரமதி, வவுனியா-வடக்கு**



“போதைப்பொருள் மற்றும் மதுசாரம் பாவனையால் பூநகரியில் உள்ள பல கிராமங்களில், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளையும், கடுமையான சமூக விரோத செயல்களையும் காண்கிறோம்.

**சசிரேகா, பூனகரி**





# மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு

**வறுமை, வீட்டு வன்முறை, சிறுவர் உரிமை மீறல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் போன்ற பரவலான சமூகப் பிரச்சினைகளை உருவாக்கும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டை முற்றிலுமாகத் தவிர்ப்பதை RAHAMA அதன் அணுகுமுறையாகக் கொண்டு, குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான பாதிப்பை தடுப்பதற்காக செயல்படுகிறது.**

ஒரு கிராமத்தில் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பாவனையைத் தவிர்த்தல், குடும்பங்களின் வாழ்வாதாரம், பொருளாதார ரீதியான பெண்களின் பங்களிப்பை உறுதி செய்யும். சிறுவர் பாதுகாப்பு மற்றும் குடும்பங்களின் நல்வாழ்வில் முன்னேற்றத்தைக் கொண்டுவரும்.



# மதுசாரம் மற்றும் போதைப்பொருட்களின் தீங்கு

**தடுக்கப்படக்கூடிய இறப்புகள்:** இது போன்ற மரணங்களுக்கு மதுசார பாவனை முதல் காரணமாக உள்ளது

**அதிகப்படியான போதை:** போதைப்பொருள் பாவனை/பழக்கம் அதிகரித்ததால் இறப்புகளும் அதிகரிக்கின்றன

**நீண்ட கால நோய்:** மார்பகப் புற்றுநோய், கல்லீரல் மற்றும் பெருங்குடல் புற்றுநோய் உள்ளிட்ட ஏழு வகையான புற்றுநோய்களுக்கு இது நேரடி காரணமாகும்

**மன ஆரோக்கியம்:** போதைப்பொருள் பாவனை மனச்சோர்வு, பதட்டம் மற்றும் தற்கொலை ஆகியவற்றுடன் நெருக்கமான தொடர்புடையது

**தொற்று நோய்கள்:** ஊசி மூலம் செலுத்தப்படும் போதைப்பொருட்கள் HIV/எய்ட்ஸ் மற்றும் ஹெபடைடிஸ் C தொற்றுகளுக்கு முக்கிய காரணமாகும்

**பொருளாதார பின்னடைவுகள்:** சுகாதாரச் செலவுகள், உற்பத்தித்திறன் இழப்பு, மற்றும் குற்றவியல் நீதிச் செலவுகள் என்று பில்லியன் ரூபாய் செலவாகிறது

**வன்முறை மற்றும் விபத்துகள்:** இது வாகன விபத்துக்கள், குடும்ப வன்முறை மற்றும் பிள்ளைகள் புறக்கணிப்பு ஆகியவற்றுடன் தொடர்புடையது


**குடும்ப சீர்குலைவு:** குழந்தைகள் உட்பட குடும்ப உறுப்பினர்களின் மனக்கிளர்ச்சி மற்றும் சண்டை சச்சரவுகளை உருவாக்குகிறது

**செயல்திறன் குறைபாடு:** அறிவாற்றல் செயல்பாடு குறைதல், நினைவாற்றல் இழப்பு மற்றும் வேலைவாய்ப்பு, கல்வி பெறுவதில் சிரமத்திற்கு வழிவகுக்கிறது.

**சமூக விரோத நடவடிக்கைகள்:** இது சமூக கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கு எதிரான மனப்பான்மையை உருவாக்குகிறது.



## வடக்கில் ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாடு



தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை: 2025


2024 ஆம் ஆண்டில், வட மாகாணத்தில் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக மொத்தம் 3,806 நபர்கள் கைது செய்யப்பட்டனர். இவற்றில், 703 கைதுகள் (18.5%) ஹெரோயின் தொடர்பான குற்றங்களாகும். அதே நேரத்தில், கஞ்சா தொடர்பான குற்றங்களுக்காக 2,052 கைதுகள் (53.9%) நடந்துள்ளன. இது பரவலான கஞ்சா பயன்பாட்டைக் குறிக்கின்றது. மெத்தம்பேட்டமைன் தொடர்பான குற்றங்கள் 511 கைதுகளுக்கு வழிவகுத்தன. இது மொத்தத்தில் 13.4% ஆகும்.
(தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை)

## மாற்றத்திற்கான RAHAMA தலையீடு

வட மாகாணத்தில் 7 பிரதேச செயலக பிரிவுகளில், போதைப்பொருள் மற்றும் மதுசார பாவனையைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு அதன் தீங்குகளைத் குறித்து RAHAMA செயல்படுகின்றது. அதன் மூலம், நீண்ட காலத்திற்கு பொருளாதார வலுவூட்டலுக்கு பங்களிக்கும் வாழ்வாதாரத்திற்கு முன்னுரிமை அளிக்கிறோம். எங்கள் அணுகுமுறை கல்வி மற்றும் விழிப்புணர்வு திட்டங்களை வலியுறுத்துகின்ற, RAHAMA சமூக மட்ட அமைப்புகள் (CBOs) மற்றும் குழுக்கள் மூலம் தரவுகளைச் சேகரித்து, பயிற்சி அமர்வுகளை நடத்துகின்றது. குழு உருவாக்கம் மற்றும் திறன் மேம்பாடு மூலம், மதுசார தடுப்பு உத்திகளை திறம்பட செயல்படுத்த எங்கள் எல்லை பங்காளர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுகின்றோம். போதைப்பொருள் தடுப்பு முயற்சிகளின் உரிமையை சமூகங்கள் எடுத்துக்கொள்ள அவர்களை வழிகாட்டுவதன் மூலம், நீடித்த மாற்றத்தை உருவாக்கவும், சமூகத்தில் மதுசாரம் மற்றும் போதைப்பொருட்களுக்கான அடிமைத்தனத்தைக் குறைக்கவும் நாங்கள் செயல்படுகின்றோம்.

**2016 ஆம் ஆண்டில், உலகளவில் 3 மில்லியன் இறப்புகளுக்கு மதுவின் தீங்கு காரணமாகும். உலக சுகாதார அமைப்பின் (WHO) கூற்றுப்படி, 15–49 வயதுடையோரைக் கருத்தில் கொள்ளும்போது மதுசாரம் முதல் ஆபத்து காரணியாகிறது.**

**15-49 வயதுடைய திருமணமான பெண்களின் நெருங்கிய துணையால் குடும்ப வன்முறையை அனுபவித்த சதவீதம், தினசரி குடும்ப வன்முறையை அனுபவித்த சதவீதம் மற்றும் வீட்டு வன்முறைக்கு உதவி கோரிய சதவீதம் ஆகியவற்றை இந்த விளக்கப்படம் காட்டுகிறது.**



தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வீட்டு வன்முறை மற்றும் மதுவிற்கான தொடர்பு குறித்து ஒரு வாதம் இருந்தாலும், இப்போது, மக்கள் பல போதைப்பொருட்களுக்கு அடிமையாகி வருவது குடும்ப பிணைப்பையும் குழந்தை பராமரிப்பையும் மோசமாக்கியுள்ளது.

மேலே உள்ள விளக்கப்படம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிக வீட்டு வன்முறை நிலவுவதை தெளிவாகக் காட்டுகிறது.

மதுவினால் ஏற்படும் தீங்குகளை நாம் தெளிவுபடுத்த வேண்டும். கல்வி நிலை, விழிப்புணர்வு அதிகரிப்பதால் வீட்டு வன்முறை சம்பவங்கள் குறைகிறது.

குடும்ப வன்முறைக்கு பல துஷ்பிரயோக நடத்தைகள் பங்களிக்கும் அதே வேளையில், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பயன்பாடு பெரும்பாலும் ஒரு முக்கிய தாக்கமாக மேற்கோள் காட்டப்படுகிறது.

images: FREEPIK